**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்–மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 27.08.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 110 –இன் கீழ் அறிவிக்கப்பட்டவாறு சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான 4 புதிய விடுதிகள் தொடங்குதல்–நிர்வாக ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி–1) துறை**

**அரசாணை (நிலை) எண்.54** **நாள் :16.08.2017.**

திருவள்ளுவர்ஆண்டு 2048.
ஹேவிளம்பி வருடம்.
ஆடி திங்கள் 31 –ஆம் நாள்.

படிக்கப்பட்டது

1. அரசாணை(நிலை)எண்.3, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி1)துறை, நாள்.06.01.2016.
2. இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5 அவர்களின் கடிதம் ந.க.எண்.த3/22743/2015, நாள்.10.02.2017.

---

**ஆணை:-**

மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 27.08.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் விதி 110-இன் கீழ் மற்ற இனங்களுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**“பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் தங்கள் பணி காரணமாக இருப்பிட மாவட்டங்களையும், குடும்பங்களையும் விட்டு பிற மாவட்டங்களுக்குச் சென்று தங்கி பணிபுரியும் போது பாதுகாப்புடனும், கவலையின்றியும், தங்கிப் பணிபுரிவதற்கு ஏதுவான மகளிர் விடுதிகள் துவங்குவது அவசியமாகும். எனவே, முதற்கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகள் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும்”.**

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் கட்ட, ரூ.4.40 கோடி ஒதுக்கீடு செய்து நிர்வாக ஒப்பளிப்புச் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், ஆதிதிராவிடர் நல இயக்குநர், தனது 10.02.2017 நாளிட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் விடுதிக் கட்டடம் தரைத்தளத்தில், காப்பாளர் அறை மற்றும் நான்கு பேர் தங்கும் வகையில் 13 அறைகள் வடிவமைத்து அனைத்து அறைகளுக்கும், நவீன குளியலறை மற்றும் கழிவறை வசதிகள் ஏற்படுத்தி ஒரு விடுதி கட்ட ரூ.110 இலட்சம் செலவாகும் எனத் தாட்கோவால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே, சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பணிபுரியும், மகளிருக்கான 4 விடுதிகள் கட்ட ரூ.4.40 கோடியில் செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, ஏற்கனவே அரசாணை(நிலை)எண்.3, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 06.01.2016–இல் வெளியிடப்பட்ட ஆணையினை ரத்து செய்தும், 2015–2016 –ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி ஒரு விடுதிக்கான தேவையினை ரூ.1.10 கோடியாக நிர்ணயித்தும் சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 4 மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகளை ரூ.4,40,00,000/–(ரூபாய் நான்கு கோடியே நாற்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> **"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதன செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் – 800 – ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள்– JE பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு 4225 01 800 JE–1604)"**

6. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கான செலவிற்கு தேவையான நிதி "4225 01 277 JA" எனும் கணக்குத் தலைப்பிலிருந்து 2017–2018 –ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் மறு நிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கான நிதியினை, அரசின் நிதி ஒப்பளிப்பிற்கேற்ப பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், விடுதிகள் கட்ட தெரிவு செய்யப்பட்ட இடத்தினை கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள தாட்கோ மேலாண்மை இயக்குநரிடம் ஒப்படைக்குமாறும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

8. கட்டுமானப் பணிக்கான செலவிற்கு தேவைப்படும் நிதி தேவைக்கேற்ப உரிய நேரத்தில் தாட்கோ நிறுவனத்திற்கு விடுவிக்கப்படும்.

9. கட்டுமானப் பணிகளை குறித்த கால வரம்பிற்குள் முடிக்க கால அட்டவணை ஒன்றினை தாட்கோ நிறுவன மேலாண்மை இயக்குநருடன் கலந்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணியின் முன்னேற்றத்தினைக் கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலவரம்பிற்குள் கட்டடங்களை கட்டி முடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதி செய்யும்படியும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் முன்னேற்ற அறிக்கை மாதந்தோறும் அரசுக்கு அனுப்பப்படவேண்டும்.

10. கட்டுமானப் பணிகள் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்களுடன் ஒத்திருப்பதையும், அவற்றின் தரத்தினையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

12. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.38438/நிதி(ஆதி(ம)பந)துறை 2017, நாள்.09.08.2017-இல் மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.1147(ஆயிரத்து நூற்று நாற்பத்து ஏழு) பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ப. அண்ணாமலை,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை- 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
முதன்மைச் செயலாளர்/மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-18.
மாநிலக்கணக்காயர், AAD/F&A Cell/Audit-I/II, சென்னை-9/18.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(சென்னை/ திருவள்ளூர்/ கோயம்புத்தூர்/திருச்சி)
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். (சென்னை/ திருவள்ளூர்/ கோயம்புத்தூர்/திருச்சி)
மாவட்ட கருவூல அலுவலர்கள் (சென்னை/ திருவள்ளூர்/ கோயம்புத்தூர்/திருச்சி)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.

நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை - 9.
அமைச்சர் (மீன்வளம், நிதி மற்றும் ப(ம)நி.சீ) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை - 9.
நிதி (ஆதி(ம)பந / (வ.செ.பொ.II/ வ.செ.பொ.I) துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.2/ஆதிந.4/ஆதிந.5/ சிஉதி(2)/அநமு-1)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.